
வெளியீடு எண் 131.

# திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள்.

T. 8354

சி. அருணாசல முதலியார்
நினைவாக அன்பளிப்பு
அளிப்பவர்:
அருணாசலம்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

தருமபுர ஆதீனம்.

வெளியீடு எண். 131.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருவொற்றியூர்த் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1947.

உ

கரிய முகில் போலு மிருளளக பார
கயல் பொருத வேலின் விழிமாதர்
கலவிகளின் மூழ்கி ம்ருகமத படீர
களப முலை தோய வணையூடே
விரக மதுவான மதனகலை யோது
வெறிய னென நாளு முலகோர்கள்
விதரணமதான வகை நகைகள் கூறி
விடுவதன் முன் ஞான வருடாராய்
அரி பிரமர் தேவர் முனிவர் சிவபோக
ரவர்கள் புகழோத புவிமீதே
அதிக நடராஜர் பரவுகுரு ராஜ
வமரர் குல நேச குமரேசா
சிரகர கபால ரரிவை யொரு பாகர்
திகழ் கனக மேனி யுடையாளர்
திருவளரு மாதி புரியதனின் மேவு
ஜெய முருக தேவர் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

குருபாதம்

# பதிப்புரை.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத் திருநாட்களில் சிவஸ்தலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிகங்களையும் அச்சிடுவித்து ஆராதனை காலத்தில் வழங்கிவருதல்போல, இம் மாத ஜன்ம நக்ஷத்திரத்தன்று [5—4—47] திருஎதிர்கொள்பாடி ஸ்ரீ ஐராவதேசுவரர் ஆலயத்திலும், திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் ஆலயத்திலும், திருஒற்றியூர் ஸ்ரீ படம்பக்கநாதர் ஆலயத்திலும் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அவ்வத் தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களும் ஆங்காங்கு ஆராதனையின்போது அன்பர்கட்கு வழங்கப்படுகிறது. அன்பர்கள் பாராயணஞ்செய்து திருவருள்பெற்று உய்வார்களாக.

உ

## சுந்தரர் வணக்கம்

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து

ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழஎடுத்துத்

தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்

வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்

—சேக்கிழார்.

குருபாதம்

# தலச்சிறப்பு

தொண்டை நாட்டுச் சிவத்தலங்கள் முப்பத்திரண்டனுள் 20-வது தலமாக விளங்குவது திருஒற்றியூர் என்னும் இத்தலம். சென்னைக்கு வடக்கே ஐந்துகல் தொலைவில் கடற்கரை அருகில் உள்ளது. இறைவர் படம்பக்கநாதர். இறைவி வடிவுடைஅம்மை. கயிலையில் ஓர் நாள் "அமர்ந்து இருந்து செய்யும் நடனத்தைத் தரிசிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்த நந்தியெம்பெருமானுக்கு நடனஞ் செய்து காட்டியது இங்குதான். இம்மூர்த்தி மாணிக்கத்தியாகர் எனப்படுவர். இங்கு அகத்தியர் திருமணக்கோலக் காட்சியைக் கண்டு தரிசித்தார். வாசுகி உபமன்யு முனிவரிடத்தில் சிவதீக்ஷைபெற்று சிவபூஜைசெய்து சிவனோடு ஐக்கியமாயினன். இவ்வடையாளம் இலிங்கத்தில் இன்றும் காணத்தக்கது.

பாரனைத்தும் பொய்யெனத்துறந்த பட்டினத்தடிகள்,

"கண்டம் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம் — தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு".

என்று பெருமானைப் புகழ்ந்திருப்பதோடு "திருஒற்றியூர் ஒருபா ஒருபது" என்னும் பிரபந்தமொன்றும் பாடியுள்ளார். இது 11-ந் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய க்ஷேத்திரத் திருவெண்பாவில்,

"தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலைஅளித்திட்டு
எஞ்சாமைபெற்றிடினும் யான்வேண்டேன்-நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்".

என்ற ஒருபாடலும் காணப்படுகிறது. சிவத்தொண்டுக்கு இடையூறுவரின் உயிர்துறத்தலே உத்தம நிலைதரும் என்பதை உலகவர்க்

குக் காட்டுதற்கு இத்தலத்தில் அவதாரஞ் செய்தவர் கலிய நாயனுர். இவர் செக்கார் குலத்தவர். திருவிளக்குப்பணி செய்து வரும் போது அப்பணிக்கு முட்டுப்பாடுவர வருந்தி இரத்தத்தை ஊற்றியாவது விளக்கிடுவோ மென்று கருதித் தம் கழுத்தை அரிய முற் பட்டார். அப்போது தியாகர் அதனைத் தடுத்து முத்திநிலை எய்துவித்தனர்.

மாந்தாதா என்னும் அரசன் சிவப்பணி கள் செய்வதற்கு மூலக்கணக்கு ஏற்படுத்தி அதன்படி செய்துவருங்கால் தியாகேசர் அம் மூல ஏட்டில் "ஒற்றியூர் நீங்கலாக" என வரிபிளந்தெழுதினமையால் சுவாமிக்கு எழுத் தறியும் பெருமான்" என்னும் ஓர் பெயரும் வழங்கப்படும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகிழின்கீழ் சபதம்செய்து சங்கிலியாரைத் திருமணம் புரிந்துகொண்டு சிலநாள் இங்குதங்கி இருந் தார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிகங்கள் ஐந்தும், சுந்தரர் அருளிய பதிகம் இரண்டும் ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன.

## சங்கிலியார் திருமணம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் காளத்தியில் இருந்தபடியே திருப்பருப்பதம் திருக்கேதாரம் ஆகிய தலங்களைத் தொழுது பதிகம்பாடி அதை அகன்று இங்குவந்தார். "பாட்டும் பாடி" என்ற திருப்பதிகம்பாடிப் போற்றிச் சிலநாளிருந்தார். இந்நாளில் ஞாயிறுகிழாரின் மகளாகிய சங்கிலியார் மணப்பருவமுற்றார். மணப்பேச்சு நிகழ்ந்தது. ஆயினும் இம்மகளார் இறைவனருள்பெற்ற ஒருவர்க்கே தாம் உரியவள் என்ற துணிவுடன் இருந்தார். வெளிப்படவும் உரைத்தார், ஒற்றியூர்ப்பெருமானை அடைந்து அவனருள் வழிச் செல்வன் எனவும் சொல்லினர். இது

அறியாது மகட்பேச வந்து சென்றவர்களும் இறந்தார்கள். அஞ்சிய பெற்ருேர்கள் இங்குக் கன்னிமாடம் அமைத்து மகளாரை இருத்திஞர்கள். மகளாரும் முன்ஊெயுணர்வு தலைப்பட அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்து பெருமானுக்குச் சாத்தும் பணியில் விளங்கிஞர்.

ஆலயத்திற்குச் சென்ற சுந்தரர் திருவருள் கூட்டுவிக்க சங்கிலியாரைக் கண்டார். காதலுற்ருர். மின்னுக்கொடிபோல்வாள் இவள் யார்கொல்? என விஞவி அறிந்தார். இருவர் பொருட்டு இப்பிறவியை எனக்கு எம்பெருமான் எய்துவித்தார்; அவர்களுள் பரவை ஒருத்தி; இவள் மற்றையவளாம் என மருண்டார். இவளை பொன்ஞர் இதழி முடியார் பால் பெறுவேன் எனத் துணிவுகொண்டார். இறைவன் சந்நிதியையடைந்து,

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி மணிநீள் முடியின்கண்

கங்கை தன்னைக் காந்தருளும்
காதல் உடையீர்; அடியேனுக்கு
இங்கு நமக்குத் திருமாலை
தொடுத்துஎன் உள்ளத் தொடைஅவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்தென் வருத்தம் தீரும்.

என்வேண்டினார். பெருமானும் அவ்வாறே "சங்கிலியைத் தருகின்றோம்; கவலை ஒழி" என்றருளி, சங்கிலியார் கனவிலும்,

சாரும் தவத்துச் சங்கிலி! கேள்
சால என்பால் அன்புடையான்;
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
உரியான்! உன்னை எனை இரந்தான்;
வார்கொண் முலையாய்; நீஅவனை
மணத்தால் அணைவாய் மகிழ்ந்து.

என்று அருள்செய்தார். கேட்ட அம்மையார் பரவையாரைச் சுந்தரர் மணந்திருப்பதைக்

குறிப்பாலறிவிக்க, பெருமான் 'பொற்றொடி யாய்! உன்னை இகந்து போகாமைக்கு ஒரு சபதம் அவன் செய்வான்' என அருளிச் சுந்தரர்பாற்சென்று நிகழ்ந்தது கூறினர். இச்செய்கை நமது தல யாத்திரைக்குஇடையூறுமெனக்கருதி ஓர்சூழ்ச்சிநினைத்து 'சபதம் செய்வதனுக்கு அவளோடு யான் வந்தால் தேவரீர் மகிழின்கீழ் இருத்தல் வேண்டும்' என்று வேண்டினர். உடன்பட்ட பெருமான் சங்கிலியாரது கனவிலும் எழுந்தருளி 'எம்முடைய சந்நிதியில் சபதம் செய்தற்கு இசையாதே! மகிழின்கீழ்க் கொள்க' என அறிவுறுத்தினர்.

மறுநாள் இருவரும் வழக்கம்போல் கோயிலுக்குள் வந்தனர். சுந்தரர் சங்கிலியார் விரும்பியபடி மூவாத் திருமகிழை முக்காலும் வலம் வந்து 'இத்தலத்தைவிட்டு யான் அகலேன்' என நின்று சபதம் செய்தார். உலகவர்முன்பு திருமணம் நிறைவேறியது. சில

காலம் சென்றது. வசந்தகாலம் வந்தது. இளந்தென்றல் வீசியது. சுந்தரருக்கு ஆரூர் வசந்தத் திருவிழா நினைவுக்கு வந்தது. விழாவில் பரவையார் ஆடல் பாடற் சிறப்பினைக் கண்டு கேட்டார்போலக் கருதினார். எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே என்றிரங்கினார். பெருமானை வணங்கி இத்தலத்தை விட்டுப் புறப்பட எண்ணினார். இச்செயல் முன்பு தாம் மகிழின்செய்த சபதத்திற்கு மாறாயினமையின் அடியெடுத்து வைக்கமுடியாமல் கண்ணொளி மறைந்தது. மூர்ச்சித்தார். செய்வகையறியாது மயங்கினார். 'சூளுறவு மறுத்ததனால் இவ்வினை வந்தெய்தியது என நினைந்தார். எம்பெருமான் சந்நிதியைச் சார்ந்து 'அழுக்குமெய் கொடு' என்று திருப்பதிகம் பாடத்தொடங்கினார். 'அங்கைநெல்லியின் பழத்திடைஅமுதே! ஒற்றியூருறைவோய்! திருவடிப் பிழையேன்; வழுக்கிவீழினும் திருப்பெயரல்லால் அறியேன்; மணியே! மணவாளா! காதற்சங்கிலி

காரணமாக, மூன்றுகண் உடையாய்! அடியேன் கண்கொள்வதே; முகத்திற்கண் இழந்து எங்ஙனம் வாழ்வேன்; அகத்திற் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால் அழையேல் போ குருடா எனத்தரியேன்; ஊன்று கோலெனக் காவதொன்றருளாய்' என்று பிரார்த்தித்தார். இதுவும் எம்பிரான் திருவருளென எண்ணி வணங்கி ஆரூர்ப்பெருமான்மீது தணியா வேட்கையினால் அன்பர்கள் சிலர் வழிகாட்ட இத்தலத்தைவிட்டகன்றார். வடதிருமுல்லைவாயிலை வணங்கித் திருவெண்பாக்கமடைந்து ஊன்றுகோல் பெற்றுச் சென்றார். திருவேகாம்பரத்தில் இடது திருக்கண் ஒளிவீசப்பெற்றார். இவ்வாறு பல தலங்களையும் வணங்கிக்கொண்டுஆரூரை அடைந்தார்.

ஒற்றியூர்ப்பெருமான்சுந்தரரிடத்தில் உண்டாக்கிய இந்நிகழ்ச்சி இறைவன் அன்பர்களிடத்துச் செய்தருளுகின்ற மறக்கருணையைத் தெளிவிக்கின்றது.

"தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொலாற்றின்
வந்திடா விடின் உறுக்கி
வளாரினுல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடின் பரிவே யாகும்
இந்நீர் முறைமை யன்றே
ஈசனுர் முனிவு மென்றும்"

என்பது சித்தியார் வாக்காகலின் சுந்தரர் இறைவனுர் தனது கண்ணொளி மழுங்கச் செய்தமையை அவர்காட்டும் அருளாகவே கொண்டார்.

உ



சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

**பண் — பஞ்சமம்.**

*திருச்சிற்றம்பலம்*

*விடையவன் விண்ணுமண்ணுந்*
*தொழநின்றவன் வெண்மழுவாட்*
*படையவன் பாய்புலித்தோ*
*லுடை கோவணம் பல்கரந்தைச்*
*சடையவன் சாமவேதன்*
*சசி தங்கிய சங்கவெண்டோ*
*டுடையவன் ஞானமில்லி*
*யுறை யும்மிட மொற்றியூரே.* க

11

பாரிடம் பாணிசெய்யப்
　　பறைக்கட் செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடலாட
　　லில யஞ்சிதை யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன்
　　றலை வன்றலை யேகலனு
ஊரிடும் பிச்சைகொள்வா
　　னுறை யும்மிட மொற்றியூரே. ௨

விளிதரு நீருமண்ணும்
　　விசும் போடனல் காலுமாகி
அளிதரு பேரருளா
　　னர னாகிய வாதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய்
　　கமழ் கொன்றையி னோடணிந்த
ஒளிதரு வெண்பிறையா
　　னுறை யும்மிட மொற்றியூரே. ௩

அரவமே கச்சதாக
    வசைத் தானலர் கொன்றையந்தார்
விரவிவெண் ணூல்கிடந்த
    விரை யார்வரை மார்பனெந்தை
பரவுவார் பாவமெல்லாம்
    பறைத் துப்படர் புன்சடைமேல்
உரவுநீ ரேற்றபெம்மா
    னுறை யும்மிட மொற்றியூரே. ௪

விலகினார் வெய்யபாவம்
    விதி யாலருள் செய்துநல்ல
பலகினார் மொந்தைதாளந்
    தகு ணிச்சமும் பாணியாலே
அலகினால் வீசிநீர்கொண்
    டடி மேலல ரிட்டுமுட்டா
துலகினா ரேத்தநின்று
    னுறை யும்மிட மொற்றியூரே. ௫

கமையொடு நின்றசீரான்
    கழ லுஞ்சிலம் புமொலிப்பச்
சுமையொடு மேலும்வைத்தான்
    விரி கொன்றையுஞ் சோமனையும்
அமையொடு நீண்டதிண்டோ
    ளழ காயபொற் றோடிலங்க
உமையொடுங் கூடிநின்றா
    னுறை யும்மிட மொற்றியூரே. ௬

நன்றியால் வாழ்வதுள்ளம்
    முல குக்கொரு நன்மையாலே
கன்றினார் மும்மதிலுங்
    கரு மால்வரை யேசிலையாப்
பொன்றினார் வார்சடலைப்
    பொடி நீறணிந் தாரமூலம்
பொன்றினா லெய்தபெம்மா
    னுறை யும்மிட மொற்றியூரே. ௭

பெற்றியாற் பித்தனென்பான்
　　பெருமான் கருமானுரிதோல்
சுற்றியான் சுத்திசூலஞ்
　　சுடர்க் கண்ணுதன் மேல்விளங்கத்
தெற்றியாற் செற்றரக்கன்
　　னுடலைச்செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றுமாள்வா
　　னுறை யும்மிட மொற்றியூரே. அ

திருவினார் போதினானுந்
　　திரு மாலுமொர் தெய்வமுன்னித்
தெரிவினாற் காணமாட்டார்
　　திகழ் சேவடி சிந்தைசெய்து
பரவினார் பாவமெல்லாம்
　　பறை யப்படர் பேரொளியோ
டொருவனாய் நின்றபெம்மா
　　னுரை யும்மிட மொற்றியூரே. கூ

தோகையம் பீலிகொள்வார்
துவர்க் கூறைகள் போர்த்துழல்வார்
ஆகம செல்வனாரை
யலர் தூற்றுதல் காரணமாக்
கூகையம் மாக்கள்சொல்லைக்
குறிக் கொள்ளன்மி னேழுலகும்
ஓகைதந் தாளவல்லா
னுறையும்மிட மொற்றியூரே. க0

ஒண்பிறை மல்குசென்னி
யிறை வன்னுறை யொற்றியூரைச்
சண்பையர் தந்தலைவன்
றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும்
பர விப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம்
விருப் பெய்துவர் வீடெளிதே. கக

திருச்சிற்றம்பலம்.



ௐ

சிவமயம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

வெள்ளத்தைச் சடையில்வைத்த வேதகீ தன்றன்பாதம்
மெள்ளத்தா னடையவேண்டின் மெய்தரு ஞானத்தீயால்
கள்ளத்தைக் கழியநின்ருர் காயத்துக் கலந்துநின்று
உள்ளத்து ளொளியுமாகு மொற்றியூ ருடையகோவே. க

வசிப்பெனும் வாழ்க்கைவேண்டா வானவ ரிறைவனின்று
புசிப்பதோர் பொள்ளலாக்கை யதனொடும் புணர்வுவேண்
அசிர்ப்பெனு மருந்தவத்தா லான்மாவி னிடமதாகி [டில்
உசிர்ப்பெனு முணர்வுமுள்ளா ரொற்றியூ ருடையகோவே.

தானத்தைச் செய்துவாழ்வான் சலத்துளே, யழுந்துகின் றீர்
வானத்தை வணங்கவேண்டில் வம்மின்கள் வல்லீராகில்
ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவவல்லார்
ஊனத்தை யொழிப்பர்போலு மொற்றியூ ருடையகோவே.

காமத்து ளெழுந்துநின்று கண்டரா லொறுப்புண்ணாதே
சாமத்து வேதமாகி நின்றதோர் சயம்புதன்னை
ஏமத்து மிடையிராவு மேகாந்த மியம்புவார்க்கு
ஓமத்து ளொளியதாகு மொற்றியூ ருடையகோவே. ௪

சமையமே லாறுமாகித் தானொரு சயம்புவாகி
இமையவர் பரவியேத்த வினிதினங் கிருந்தவீசன்
கமையினை யுடையராகிக் கழலடி பரவுவார்க்கு
உமையொரு பாகர்போலு மொற்றியூ ருடையகோவே. ௫

ஒருத்திதன் றலைச்சென்றாளைக் கரந்திட்டா னுலகமேத்த
ஒருத்திக்கு நல்லனாகி மறுப்படுத் தொளித்துமீண்டே
ஒருத்தியைப் பாகம்வைத்தா னுணர்வினா லையமுண்ணி
ஒருத்திக்கு நல்லனல்ல னொற்றியூ ருடையகோவே. கூ

பிணமுடை யுடலுக்காகப் பித்தராய்த் திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடை நெஞ்சினுள்ளா னினைக்குமாநினைக்கின்றார்க்கு
உணர்வினோ டிருப்பர்போலு மொற்றியூ ருடையகோவே.

பின்னுவார்சடையான் றன்னைப்பிதற்றிலாப்பேதைமார்கள்
துன்னுவார் நரகந்தன்னுட் டொல்வினை தீரவேண்டின்
மன்னுவான்மறைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி
உன்னுவா ருள்ளத்துள்ளா ரொற்றியூ ருடையகோவே.

மூள்குவார்போகம்வேண்டின்முயற்றியாலிடர்கள்வந்தால்
எள்குவா ரெள்கினின்றங் கிதுவொரு மாயமென்பார்
பள்குவார் பத்தராகிப் பாடியு மாடிநின்றும்
உள்குவா ருள்ளத்துள்ளா ரொற்றியூ ருடையகோவே. ௯

வெறுத்துகப்புலன்களைந்தும்வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துக வார்வச்செற்றக் குரோதங்க ளானமாயப்
பொறுத்துகப் புட்பகத்தே ருடையானை யடரவூன்றி
ஒறுத்துகந் தருள்கள்செய்தா ரொற்றியூ ருடையகோவே,

திருச்சிற்றம்பலம்,

திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன் கூட்டைவாளா வுள்ளத்தோர்கொடுமைவைத்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்கமாட்டேன் [ துக்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூ ருடையகோவே. க

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
உனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே. உ

* * * * * கo

திருச்சிற்றம்பலம்.

## திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

செற்றுக் களிற்றுரி கொள்கின்ற
ஞான்று செருவெண்கொம்பொன்
றிற்றுக் கிடந்தது போலு
மிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி
போலச் சுடரிமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு
மாலொற்றி யூரனுக்கே. ௧

சொல்லக் கருதிய தொன்றுண்டு
கேட்கிற்றொண் டாயடைந்தார்
அல்லற் படக்கண்டு பின்னென்
கொடுத்தி யலைகொண்முந்நீர்
மல்லற் றிரைச்சங்க நித்திலங்
கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றி
யூருறை யுத்தமனே. ௨

பரவை வருதிரை நீர்க்கங்கை
பாய்ந்துக்க பல்சடைமேல்
அரவ மணிதரு கொன்றை
யிளந்திங்கள் சூடியதோர்
குரவ நறுமலர் கோங்க
மணிந்து குலாயசென்னி
உரவு திரைகொணர்ந் தெற்றொற்றி
யூருறை யுத்தமனே. ௩

தானகங் காடரங் காக
வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறு முடைதலை
யிற்பலி கொள்வதுந்தான்
தேனக நாறுந் திருவொற்றி
யூருறை வாரவர்தாம்
தானக மேவந்து மீபானகம்
வேண்டி யுழிதர்வரே. ௪

வேலைக் கடனஞ்ச முண்டுவெள்
ளேற்றெருடும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிட
மாவது வாரிகுன்று
ஆலைக் கரும்பொடு செந்நெற்
கழனி யருகணைந்த
சோலைத் திருவொற்றி யூரை
யெப்போதுந் தொழுமின்களே. ௫

புற்றினில் வாழு மரவுக்குந்
திங்கட்குங் கங்கையென் னும்
சிற்றிடை யாட்குஞ் செறிதரு
கண்ணிக்குஞ் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சுடை
யான்பிரி யாதெனையாள்
விற்றுடை யானொற்றி யூருடை
யான்றன் விரிசடையே. ௬

இன்றரைக் கண்ணுடை யாரெங்கு
மில்லை யிமயமென் னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்
பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை
யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் ணூரொற்றி
யூருறை யுத்தமனே. ௭

சுற்றிவண் டியாழ்செயுஞ் சோலையுங்
காவுந் துதைந்திலங்கு
பெற்றிகண் டான்மற் றியாவருங்
கொள்வர் பிறரிடைநீ
ஒற்றிகொண் டாயொற்றி யூரையுங்
கைவிட் டுறுமென்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுவொப்ப
தில்லிடம் வேதியனே. ௮

சுற்றிக் கிடந்தொற்றி யூரனென்
சிந்தை பிரிவறியான்
ஒற்றித் திரிதந்து நீயென்ன
செய்தி யுலகமெல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு
நாமென்று கண்குழித்துத்
தெற்றித் திருப்பதல் லாலென்னஞ்
செய்யுமித் தீவினையே. ௯

அங்கட் கடுக்கைக்கு முல்லைப்
புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக்
களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப்
புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி
யூரர் திருமுடியே. ௧௦

தருக்கின வாளரக் கன்முடி
பத்திறப் பாதந்தன்னால்
ஒருக்கின வாறடி யேனைப்
பிறப்பறுத் தாளவல்லான்
நெருக்கின வானவர் தானவர்
கூடிக் கடைந்தநஞ்சைப்
பருக்கினவா றென்செய்கே னொற்றி
யூருறை பண்டங்கனே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுந்தொகை

### திருச்சிற்றம்பலம்

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பு மதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே. க

வாட்ட மொன்றுரைக் கும்மலை யான்மகள்
ஈட்ட வேயிரு ளாடி யிடுபிணக்
காட்டி லோரி கடிக்க வெடுத்ததோர்
ஓட்டை வெண்டலைக் கையொற்றி யூரரே. உ

கூற்றுத் தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மின்
ஆற்றுத் தண்டத் தடக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்நினை வார்க்கெலாம்
ஊற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே. ங

சுற்றும் பேய்சுழ லச்சுடு காட்டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல் லாம்பலி தேர்ந்துபோய்
ஒற்றி யூர்புக் குறையு மொருவரே. ச

புற்றில் வாளர வாட்டி யுமையொடு
பெற்ற மேறுகந் தேறும் பெருமையான்
மற்றை யாரொடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வானோர் கபாலியே. ரு

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையுநம் பாவமே. ௬

பலவு மன்னங்கள் பன்மலர் மேற்றுஞ்சும்
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே. ௭

ஒன்று போலு முகந்தவ ரேறிற்று
ஒன்று போலு முதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தாரொற்றி யூரரே. ௮

படைகொள் பூதத்தர் வேதத்தர் கீதத்தர்
சடைகொள் வெள்ளத்தர் சாந்தவெண் ணீற்றினர்
உடையுந் தோலுகந் தாருறை யொற்றியூர்
அடையு முள்ளத் தவர்வினை யல்குமே. கூ

வரையி னாலுயர் தோளுடை மன்னனை
வரையி னார்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னார்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னாற்பொலிந் தாருயர்ந் தார்களே. கo

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்

### திருச்சிற்றம்பலம்

வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கு
மதமத்தஞ் செஞ்சடைமேன் மதியஞ் சூடித்
திண்டோள்க ளாயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோ கனார்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
யொற்றியூர் மேய வொளி வண்ணனார்
கண்டேனான் கனவகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே. க

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளே றேறி
யணிகங்கை செஞ்சடைமே லார்க்கச் சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையா ராணு மாவர்
பசுவேறி யுழிதருமெம் பரம யோகி
காமத்தா லைங்கணையான் றன்னை வீழக்
கனலா வெரிவிழித்த கண்மூன் றினர்
ஓமத்தா ஞன்மறைக ளோத லோவா
வொளிதிகழு மொற்றியூ ருறைகின் றாரே. உ

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்துவைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்ட ரெல்லே
கொள்ளத்தா னிசைபாடிப் பலியுங் கொள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங் காட்டி
உள்ளத்தை நீர்கொண்ட ரோத லோவா
வொளிதிகழு மொற்றியூ ருடைய கோவே. ௩

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர் தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்க ணெடுங்கட லுணின்று தோன்றும்
திரைமோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே. ௪

மத்தமா களியானை யுரிவை போர்த்து
வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
பேதையரை யச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கடாம் பலருடனே கூடிப் பாடிப்
பயின்றிருக்கு மூரேதோ பணியீ ரென்ன
ஒத்தமைந்த வுத்திரநா ளீர்த்த மாக
வொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே. ௫

கடிய விடையேறிக் காள கண்டர்
கலையோடு மழுவாளோர் கையி லேந்தி
இடிய பலிகொள்ளார் போவா ரல்ல
ரெல்லாந்தா னிவ்வடிகள் யாரென் பாரே
வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோ மயிலாப் புள்ளே
செடிபடுவெண் டலையொன் றேந்தி வந்து
திருவொற்றி யூர்புக்கார் தீய வாறே. சு

வல்லராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணு மென்ன
வெவ்வாற்று லெல்வகையாற் காண மாட்டார்
நல்லார்க ணான்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைதான் றிரையேறி யோத மீளு
மொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே. எ

நிலைப்பாடே நாண்கண்ட தேடு கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவே னெங்குங் காணேன்
சலப்பாடே யினியொருநாட் காண்பே ளுகிற்
றன்ளுகத் தென்ளுக மொடுங்கும் வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டே
னொற்றியூ ருறைந்திங்கே திரிவா னையே. அ

மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பிறிதல்லை யாளுயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீய யல்லை
யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே. கூ

மருவுற்ற மலர்க்குழலி மடவா ளஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத்
திருவடியின் விரலொன்றா லலற வூன்றி
உருவொற்றி யங்கிருவ ரோடிக் காண
வோங்கினவ் வொள்ளழலா ரிங்கே வந்து
திருவொற்றி யூர்நம்மூ ரென்று போனார்
செறிவளைக ளொன்றொன்றாச் சென்ற வாறே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்



# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்கள்

## பண் – குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவாய் ஒற்றி யூரே. க

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் அடிகள் இறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவாய் ஒற்றி யூரே. உ

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகளுந் திரைவாய் ஒற்றி யூரே. ௩

என்ன தெழிலும் நிறையுங் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவா னொற்றி யூரே. ௪

பணங்கொள் அரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவா ரிட்ட
உணங்கல் கவர்வா னொற்றி யூரே. ௫

படையார் மழுவன் பால்வெண் நீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைக ளறுப்பா னென்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே. ௬

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே(று)
ஒன்றை யுடையா னொற்றி யூரே. ௭

கலவம் மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பலவும் பவளப் படியான்
உலகி லுள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவா யொற்றி யூரே. ௮

பற்றி வரையை யெடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றும் திரைவா யொற்றி யூரே. ௯

ஒற்றி யூரும் அரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊர னுரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. க

கட்ட னேன்பிறந் தேனுனக் காளாய்க்
காதற் சங்கிலி காரண மாக
எட்டி ஞல்திக ழுந்திரு மூர்த்தி
யென்செய் வானடி யேனெடுத் துரைக்கேன்
பெட்ட ஞகிலுந் திருவடிப் பிழையேன்
பிழைப்ப ஞகிலுந் திருவடிக் கடிமை
ஒட்டி னேனென்னை நீசெய்வ தெல்லா
மொற்றி யூரெனும் ஊருறை வானே. ௨

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டி யேபலர்க் குங்களி கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே
அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல
வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவுந்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. ௩

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்றால்
யாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற்
சொல்லு வாரையல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாயடி யேன்கண்
கொள்வ தேகணக் குவழக் காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. ௪

வழித்த லைப்படு வான்முயல் கின்றேன்
உன்னைப் போலென்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச்
சுழல்கின் றேன்சுழல் கின்றதென் னுள்ளம்
கழித்த லைப்பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீயரு ளாயின செய்யாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. ௫

மாலை நோக்கியர் கண்வலைப் பட்டு
வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித்
தேனை யாடிய கொன்றையி னாயுன்
சீலமுங் குணமுஞ் சிந்தியாதே
நானு மித்தனை வேண்டுவ தடியேன்
உயிரொடுந் நரகத் தழுந்தாமை
ஊன முள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. சு

மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்
எஞ்சி னாரொடு வாழவு மாட்டேன்
பெற்றி ருந்தும் பெருந்தொழி கின்ற
பேதை யேன்பிழைத் திட்டதை யறியேன்
முற்றும் நீயெனை முனிந்திட அடியேன்
கடவ தென்னுனை நான்மற வேனேல்
உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. எ

கூடி ஞய்மலே மங்கையை நினையாய்
கங்கை யாயிர முக முடையாளைச்
சூடி ஞயென்று சொல்லிய ||க்கால்
தொழும்ப னேனுக்குஞ் சொல்லலு மாமே
வாடி நீயிருந் தென்செய்தி மனனே
வருந்தி யர்னுற்ற வல்வினைக்'கஞ்சி
ஊடி ஞலினி யாவதொன் றுண்டே
யொற்றி யூரெனும் ஊருறை வானே. அ

மகத்திற் புக்கதோர் சனியெனக் காஞய்
மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நானென்று சொன்னல்
அழையேற் போகுரு டாளனத் தரியேன
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன்
முக்கண்ணு முறையோ மறையோதீ
உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. கூ

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல்
ஒற்றி யூருறை செல்வனை நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற
நான்மறை அங்கம் ஓதிய நாவன்
சீலந் தான்பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்றொண்டன் ஊரனுரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே. க0

திருச்சிற்றம்பலம்.

பிரதிகள் 500.

ஞானசம்பந்தம் பதிப்பகம்,

தருமபுர ஆதீனம்.

Q. H. No T. E. 68. 4-4-47-3